# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 19.03.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஒரு விஷயத்தைப் பற்றி நான் கூறப்போகிறேன். இது சென்ற குத்பாவின் ஒரு பகுதி தான். அதுபற்றி கூறிவிட்டு இன்று நான் விளக்கப் போகிற கருத்து தொடர்பான வசனங்களை முழுமையாக எடுத்து வைப்பேன்.

சென்ற குத்பாவில் நான் கூறியது போன்று ரிஸ்க் என்றால் உலகியல் செல்வம் என்று மட்டும் பொருளல்ல. மாறாக, மனிதனின் எல்லாவிதமான ஆன்மீக சக்திகள், ஆற்றல்கள் மற்றும் இறைவனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட அனைத்தும் ரிஸ்க் -ல் அடங்கும். மேலும் மனிதனுக்கு இறைவன் வழங்கியுள்ள தகுதி, ஆற்றல்களும் இதில் அடங்கும். இந்த ரிஸ்கையும் கூட முழுமையான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருந்தான். பிறகு சஹாபாக்களுக்கும் வழங்கினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் திருக்குர்ஆனை இறக்கினான். பிறகு அவர்களின் சுன்னத்திலிருந்து சஹாபாக்கள் பயனடைந்தனர்.

பிறகு கடைசி காலத்தைப் பற்றியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்தார்கள். மக்கள் உலகாதாயங்களில் மூழ்கிக் கிடந்தனர். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களால் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான இறந்தவர்கள் உயிர்பெற்றனர். ஒரு காலம் வரும். பிறகு எனது சொல், செயல்கள் எல்லாம் இருந்தும் முஸ்லிம்களிடம் இந்த ஆன்மீக உணவு குறைவு ஏற்படும். இந்த ஆன்மீக உணவு, ஆன்மீக கருவூலத்தில் கவனம் செலுத்தாமல் முஸ்லிம்கள் அந்த ஆன்மீக அருளில் இருந்து விலகி விடுவர். அப்போது அல்லாஹ்வின் போர் வீரர் மஸீஹ் மவ்வூதின் வடிவத்தில் வருவார். மீண்டும் எனது கருவூலத்திலிருந்து மக்களுக்கு பகிர்ந்தளிப்பார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த கருவூலத்தை மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியிருந்தது. பகிர்ந்தளிக்கவும் செய்தார்கள்.

**அது குறித்து அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அபூதாவூத் என்ற நம்பத்தகுந்த ஹதீஸ் நூலில் கூறப்பட்ட ஒரு செய்தியை எடுத்து வைத்து மக்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். இந்த முன்னறிவிப்பு சஹீஹ் அபூதாவூதில் எழுதப்பட்டுள்ளது. ஹாரிஸ் என்ற பெயருடைய ஒருவர் சமர்கண்ட் என்ற இடத்திலிருந்து தோன்றுவார். ரஸூல் (ஸல்) அவர்களின் குடும்பத்திற்கு வலிமை சேர்ப்பார். அவருக்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்குவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வாஜிப் ஆகும். இல்ஹாம் அடிப்படையில் எனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முன்னறிவிப்பு மஸீஹின் வருகை குறித்த முன்னறிவிப்பாகும். முஸ்லிம்களின் இமாம் முஸ்லிம்களிடமிருந்து தோன்றுவார். இந்த இரு முன்னறிவிப்புகளும் ஒரே கருத்தாகும். இரு முன்னறிவிப்புகளையும் உண்மைப்படுத்துபவனாக நான் வந்துள்ளேன்.

மஸீஹின் பெயரால் முன்னறிவிக்கப்பட்ட விஷயங்கள், விசேஷமான அடையாளங்கள் இரண்டேயாகும். ஒன்று அவர் வரக்கூடிய காலத்தில் முஸ்லிம்களின் உட்புறநிலை மிகவும் மோசமான முறையில் தடம்புரண்டிருக்கும். அவற்றை தனது சரியான போதனைகளால் சரி செய்வார். அவர்களது ஆன்மீக மாசுகள் அந்தரங்க தகுதியின்மைகளை முற்றிலும் அகற்றி ஞானங்கள், இறை ஞானங்களை அவர்களின் முன் வைப்பார். எந்த அளவுக்கு எனில் அதனை பெற்று மக்களே சோர்ந்து போய் விடுவர். உண்மையை அவரிடம் தேடுபவர் ஒருபோதும் தகுதியற்றவராக இருக்கமாட்டார். உண்மையின் மீது பசியும்,

தாகமும், கொண்டவருக்கு இறை ஞானத்தின் இனிய பானம் பருகத் தரப்படும். உண்மை, அறிவுகளின் முத்துக்களால் நிரப்பப்படும். திருக்குர்ஆனின் ஞானங்களால் நிரப்பப்பட்ட குவளைகள் வழங்கப்படும். இந்த ஆன்மீக கருவூலங்களை இக்காலத்தின் மக்கள் ஏற்க மறுக்கின்றனர். இன்னொரு புறம் உண்மையில் பசியும் தாகமும் கொண்டவர்கள் இதனை பயன்படுத்துகின்றனர். பயன்படுத்துவர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய அறிவு, ஞானங்களின் கருவூலங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தை நமக்கு பெற்றுத் தருபவையாக உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நேசத்தை உள்ளத்தில் நிறைப்பவையாகவும், எல்லா மார்க்கத்தின் மீதும் இஸ்லாத்தின் உண்மைகளை நிரூபித்துக் காட்டுபவையாகவும் உள்ளது. நமது பணி இந்த அறிவும், ஆன்மீகமும் நிறைந்த கருவூலத்தால் நமது பையை நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றி பெறுவோம்.

உருது படிக்கத் தெரிந்தவர்கள், உருது புரியக்கூடியவர்கள் அன்னாரது நூல்களிலிருந்து தமது தகுதிக்கேற்ப புரிய முயற்சி செய்கின்றனர். முயற்சி செய்யவும் வேண்டும். நான் முன்னர் ஒருமுறை இதன் பக்கம் கவனமூட்டினேன். எல்லா ஜமாஅத் அமைப்புகளும், கிளை அமைப்புகளும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூலைப் படிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். உருது தெரியாதவர்கள் தமது மொழியில் எந்த அளவுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளதோ அதுவரை படிக்க வேண்டும். மொழிபெயர்ப்புப் பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆங்கிலத்தில் மிக அதிகமாகவும் மற்ற மொழிகளில் குறைவாகவும் நடைபெற்று வருகிறது. நமக்கு வாய்ப்பு கிடைத்தால் முடிந்தவரை இந்த ஆன்மீக கருவூலத்தை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்து உலகின் எல்லை வரை கொண்டு செல்பவர்களாவோமாக.

இன்று ஹஸீப் (கணக்கெடுப்பவன், போதுமானவன்) என்ற பண்பு சம்பந்தமாக சில வசனங்களை தேர்ந்தெடுத்துள்ளேன். சூரா பக்கராவில் அல்லாஹ் கூறுகின்றான்:

**லில்லாஹி மாஃபிஸ்ஸமாவாத்தி வர்அர்ழ். வஇன் துப்[d]தூ மாஃபீ அன்புஸி[k]கும் அவ்துஹ்ஃபூஹு யுஹாஸிப்[k]கும் பிஹில்லாஹ். ஃப யக்ஃபிரு லிமய்யஷாஉ வயுஅஸ்ஸிபு மய்யஷாஉ வல்லாஹு அலா குல்லி ஷய்யின் கதீர்** – வானங்களிலும் பூமியிலுமுள்ளவை (யாவும்), அல்லாஹ்விற்கே உரியன. உங்கள் உள்ளங்களிலுள்ளதை நீங்கள் வெளிப்படுத்தினாலும், அல்லது அதனை மறைத்து வைத்தாலும் அதுபற்றி உங்களிடம் அல்லாஹ் கணக்குக் கேட்பான். பின்னர், தான் நாடுபவனை மன்னித்து விடுவான். தான் நாடுபவனுக்குத் தண்டனை கொடுப்பான். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் பேராற்றல் உடையவனாவான். (2:285)

ஒரு முஃமின் தமது நஃப்ஸின் மீது எப்போதும் கண்காணிப்பு வைத்து இருக்கும் போது மட்டுமே அவர் முஃமின் என்று அழைக்கப்படுகிறார். இறைவன் நபி கரீம் (ஸல்) அவர்கள் மூலம் வழங்கிய போதனைக்குள் தமது நஃப்ஸை செயல்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அதுவன்றி அவரது வெளிப்படையான இபாதத் பயனற்றதாகும். ஜமாஅத்தின் பணிகளை அவர்கள் செய்யும் போது அவர்களது சுற்றுப்புறம் அவர்களை கவனிக்கிறது.

அல்லாஹ் உங்களின் நிலைமைகளை நன்கறிகிறான். நீங்கள் செய்பவை காட்டுவதற்காக இருப்பின் அவன் அதற்கு எந்த மதிப்பும் அளிக்கமாட்டான். அவர் தப்லீக் செய்கிறார். ஆனால் செயல்கள் அதற்கேற்ப இல்லையென்றால் அடியார்களின் கண்களை மறைக்கலாம். ஆனால் இறைவனிடமிருந்து அதனை மறைத்து விட முடியாது.

அல்லாஹ் முஃமின்களுக்கு தெளிவாக்கி விட்டான். அல்லாஹ்வுக்கு மறைவானது எதுவும் இல்லை. பிறகு அல்லாஹ்விடமிருந்து மறைக்க முடியாது எனில் கூலியும் அதற்கேற்பவே இருக்கும்.

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**இன்னமல் அஃமாலு பின்னியாத்** – செயல்கள் எண்ணங்களைக் கொண்டே முடிவு செய்யப்படுகின்றன. அமல்கள் நிய்யத்தின் அடிப்படையில்தான் எடுக்கப்படுகின்றன. அமல் செய்பவரின் உள்ளம் அந்த அமலை எவ்வாறு எடுக்கிறது என்று பார்க்கப்படுகிறது. நிய்யத்தின் நிலை என்னவென்பதை அல்லாஹ் மட்டுமே அறிய முடியும்; அறிகிறான்.

எனவே முஃமின்களுக்கு தெளிவுபடுத்தினான். எந்த இறைவன் வானங்கள், பூமியை படைத்தானோ அவன் ஒவ்வொரு பொருளின் நுட்பத்தையும் நன்கறிகிறான். மனிதன் இதற்கு விதிவிலக்கு இல்லை. அல்லாஹ் உங்கள் உள்ளங்களில் உள்ள அனைத்தையும் நன்கறிகிறான். உங்கள் நஃப்ஸ்களை தூய்மைப்படுத்துங்கள். உங்கள் உள்ளங்களை இறைவனுக்காக தூய்மைப்படுத்த முயற்சி செய்யுங்கள்.

எனவே இறைவன் கூறுகின்றான்: **யுஹாஸிப்kகும் பிஹில்லாஹ்** – அல்லாஹ் அதற்குரிய கணக்கை எடுப்பான். நிய்யத்திற்கேற்ப நற்கூலியை பெறுவார்கள்.

**திருக்குர்ஆனில் இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

எவருக்கும் சிறிதும் அநீதி இழைக்காமல் இருக்க நாம் மறுமை நாளில் சரியான தராசுகளை ஏற்படுத்துவோம். (ஒரு செயல்) கடுகளவு இருந்தாலும் நாம் அதனைக் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதுமானவனாவோம். (21:48)

அல்லாஹ் ஒவ்வொரு நற்கூலியும் தண்டனையும் ஒருவரின் அமலுக்கு ஏற்பவே தருகிறான். சிறிதும் அநீதியிழைப்பதில்லை. ஏனெனில் உள்ளத்தின் பாதாளம் வரை நன்கறிந்துள்ளான். ஒவ்வொரு அமலின் நிய்யத்தும் தூண்டுதலும் அவனுக்கு தெரியும். அதற்கேற்பவே கணக்கெடுப்பான்.

தொழுகைகள் இறைவனுக்காக தொழப்படுகிறதா? அல்லது காட்டுவதற்காகவா என்று நன்கறிவான். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தானதர்மங்கள் கொடுக்கப்படுகிறதா அல்லது காட்டுவதற்காக கொடுக்கப்படுகிறதா என்று அவன் நன்கறிகிறான். எந்த நற்செயலாக இருப்பினும் அதனை செய்வதற்குரிய தூண்டுதல் என்ன? மனத்தூய்மை எப்போதும் உங்களின் கவனத்தில் இருக்க வேண்டும். இந்த நோக்கத்தை கவனத்தில் வைத்து ஒவ்வொரு அமலும் செய்ய வேண்டும்.

சில நல்ல எண்ணங்கள் அல்லது தீய எண்ணங்களுக்கும் கூட அல்லாஹ் பிரதிபலன் வழங்குகின்றான். ஏனெனில் அல்லாஹ்வின் ரஹ்மத் மிகப் பரந்தது. ஒவ்வொரு தீமையைப் பற்றியும் உள்ளத்தில் எண்ணம் ஏற்படும் போது உடனே அதற்காக அவன் பிடித்து விடுவதில்லை. மாறாக ஒருவர் தீய எண்ணத்தை உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை செய்துவிட வேண்டும் என்று நினைக்கிறார் எனில் அவரும் பிடிக்கப்படத் தகுந்தவர்.

உதாரணமாக, ஒரு மனிதனின் பகைமை, பொறாமையின் காரணத்தால் அடுத்த மனிதனுக்கு கஷ்டம் தர விரும்புகிறான் எனில், செயல்ரீதியாக எந்த நஷ்டத்தையும் விளைவிக்காவிட்டாலும் சந்தர்ப்பம் கிடைத்தால் நஷ்டம் ஏற்படுத்தி விடுவேன் என்று நினைக்கிறான் என்றால் இறைவனின் கோபத்திற்கு காரணமாக அமையும். பிறகு அது செயல்படும் போது அல்லாஹ்வின் கோபத்திற்கு காரணமாக அமைகிறது. தீய எண்ணம் உள்ளத்தில் வரலாம். ஆனால் உடனே அதற்காக இறைவன் பிடிப்பதில்லை. நான் இதனை செய்வேன் என்று நிய்யத் வைக்கும் போது இறைவனின் பிடிக்கு ஆளாகின்றான். மனிதன் தீய செயலை அமல்படுத்த வேண்டும் என்று நிய்யத் வைக்கவில்லை எனில், சந்தர்ப்பத்தை தேடவில்லை எனில் உள்ளத்தில் எழும் தீய எண்ணத்தை மன்னித்து விடுகிறான்.

**இதுபற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் மலக்குகளுக்கு கட்டளையிடுகிறான். எனது அடியான் தீய செயல் செய்வதற்காக யோசிக்கிறான். அதற்காக பாவத்தை எழுத வேண்டாம். ஆனால் அந்த பாவத்திற்கான ஒரு செயல்வடிவம் கொடுக்க திட்டம் எழுந்தால், பிறகு ஒரு பாவம் எழுதப்பட வேண்டும். ஒருவர் நன்மை செய்ய விரும்பினார்; ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் அதனை செய்ய முடியவில்லை எனில் அவருக்கு ஒரு நன்மையை எழுதுங்கள். அந்த நல்ல எண்ணத்திற்கு செயல்வடிவம் தந்து விட்டால் அதற்கு 10 நன்மைகள் எழுதுங்கள். எனவே, அல்லாஹ் தனது அடியார்களின் மீது இவ்வளவு கருணை வைத்துள்ளான்.

ஒரு முஃமின் தனது அமலை சரியாக்க முயற்சி செய்து கொண்டிருப்பார். அதன் மூலம் இறைவனது பரந்த அருளிலிருந்து பங்கு பெறுவார். இறை தண்டனையிலிருந்து தப்பித்து விடுவார்.

**திருக்குர்ஆனில் இறைவன் கூறுகின்றான்:**

**நாம் ஒவ்வொரு மனிதரின் கழுத்திலும் செயலைப் பிணைத்துள்ளோம். மறுமை நாளில் நாம் அவரு(டைய செயல்களு)க்குரிய ஒரு நூலை வெளிப்படுத்தி அவர் முன் வைத்து விடுவோம். அவர் அதனை (முற்றிலும்) திறந்திருக்கக் காண்பார். (17:14,15)**

அல்லாஹ் இங்கு மீண்டும் மனிதனை எச்சரிக்கிறான். உனது செயலை கவனித்துக் கொள். எதனை நீ செய்தாலும், அதனை வெளிப்படுத்தினாலும் சரி, மறைத்தாலும் சரி அல்லாஹ் அதனை கண்காணிப்பான்.

இங்கு இன்னும் அதிகமாக தெளிவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் செயலை மறைக்கலாம். ஆனால் உங்கள் ஒவ்வொரு செயலும் உங்கள் கழுத்தில் (இப்போது) கட்டி தொங்கவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்கின்ற செயலின் ஒரு டைரி உள்ளது. அதில் நீங்கள் செய்கிற நன்மைகளும் தீமைகளும் எழுதப்படுகின்றன. கியாமத் நாளில் அந்த நூல் திறக்கப்பட்டு உங்கள் முன் கொண்டு வரப்படும். சில நேரங்களில் மனிதனுக்கு தான் செய்த தீமைகள் நினைவில் இருப்பதில்லை. அல்லது நினைவில் நிற்கும் அளவுக்கு அதற்கு முக்கியத்துவம் தருவதும் இல்லை.

உங்கள் கழுத்தில் பிணைக்கப்பட்டுள்ள நூலில் ஒவ்வொரு செயலும் தேதி, நேரத்துடன் எழுதப்படுகிறது. நீங்கள் செய்கிற ஒவ்வொரு அமலும் எழுதப்படுகிறது. இது உங்கள் செயல் பதிவேட்டின் நிரந்தர பகுதியாக இருந்து விடும். எனவே மனிதன் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று சின்னஞ்சிறு செயல்கூட எழுதப்பட்டு நம் முன்னால் நிற்கும். எனவே மரணத்திற்குப் பிறகு செயல் பதிவேட்டின் தீய செயல்கள் இருந்தால் தண்டனை கிடைக்கும். நன்மையிருந்தால் நற்கூலி கிடைக்கும். எனவே ஒவ்வொரு நாளும் தனது செயல்களை மனிதன் கணக்குப் பார்க்க வேண்டும். தினந்தோறும் மனிதன் தன்னை கணக்குப் பார்க்கும் போது சமூகத்தின் தீமையிலிருந்து அது மனிதனை காப்பாற்றுகிறது. ஒருவர் தீய செயல்கள் செய்யும் போது மக்கள் அவரை நோக்கி விரலை உயர்த்துகின்றனர். இந்த கணக்கெடுப்பு மனிதனை எச்சரிக்கையடையச் செய்கிறது. மக்களின் பார்வையிலிருந்தும் மனிதன் தப்பிப்பான். இறைவனின் திருப்திக்கும் அது காரணமாக அமைகிறது. எனவே நமது பதிவேடு கிடைத்தால் அதில் நன்மை தான் இருக்க வேண்டும். அதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும். இதுவும் அல்லாஹ்வின் அருளால் தான் நடக்கும். அதனை பெறுவதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும். அவன் பக்கம் குனிய வேண்டும்.

**திருக்குர்ஆனில் ஓரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**பின்னர் தமது பதிவேடு தம் வலக்கையில் கொடுக்கப்படுபவரிடம் விரைவில் எளிதான கேள்வி கணக்கு கேட்கப்படும். (84:8,9)**

வலக்கரம் என்பது நன்மைகள். அத்தகைய மக்களின் நன்மைகள் தீமைகளை விட அதிகமாக இருக்கும். அல்லாஹ் தனது ரஹ்மத்தினாலேயே கணக்கை எளிதாக்குவான். இன்னொரு கூட்டம் இருக்கும்.

அவர்களது கணக்கு மிகவும் சிரமமானதாக இருக்கும். அவர்களின் முதுகுக்குப் பின்னால் இருந்து அவர்களின் பதிவேடு தரப்படும்.

சென்ற குத்பாவில் ஒரு ஹதீஸை கூறினேன். முஃமின்களின் கணக்கு எளிதாக இருக்கும் என்றால் அல்லாஹ் அவர்களுக்கு கருணை மன்னிப்பு மிகுந்த நடைமுறையைக் காட்டுவான். எந்த கூட்டத்திற்கு முதுகுக்குப் பின்னாலிருந்து அவர்களின் நூல் தரப்படுமோ அல்லாஹ் அவர்களுக்கு அவர்களின் நூலை தந்து விட்டு இறைவன் கூறுவான்: இந்த நூலைப் படித்துப் பார்த்து, கணக்குப் பார்த்துக் கொள். இந்த கணக்கெடுப்புக்கு உனது நஃப்ஸே போதுமானது.

அல்லாஹ் கூறுகிறான். அவன் யாரை விரும்புவானோ அவரை மன்னிப்பான். அவன் விரும்புபவரை தண்டிப்பான். இது எந்த பலவந்தத்தின் காரணத்தாலும் அல்ல. மாறாக, ஒவ்வொரு மனிதனிடமும் அவனது நூலைப் படித்துப் பார்க்குமாறு அல்லாஹ் கூறுவான்.

தீய செயல் செய்பவரின் நஃப்ஸ், தானே சாட்சி சொல்லும். ஆம்! எனது செயலே அப்படித்தான். அது இப்போது தண்டனைக்குரியவனாக்கி உள்ளது.

மனிதன் யாருக்கும் அநீதி செய்வதில்லை. ஓர் அணுவளவு அமலுக்கும் கூட நற்கூலி தந்து விடுவான். ஆம்! அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றல் உடையவன். அவன் விரும்புபவரை மன்னிக்க முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகிறார்கள். திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் இதனைக் கூறுகிறது. மறுமை வாழ்வு என்பது ஒரு புதிய ஒன்றல்ல. மாறாக அந்த உலகில் எல்லா நடவடிக்கைகளும் இவ்வுலக செயல்களின் சாயலும் விளைவுகளுமேயாகும். நாம் இந்த செயல்களின் மறைவான தாக்கத்தை அவனது கழுத்தில் மாட்டியுள்ளோம். அந்த மறைவான தாக்கத்தைத்தான் மறுமையில் வெளிப்படுத்துவோம். தெளிவான செயல் பதிவேட்டின் வடிவில் காட்டுவோம். இந்த வசனத்தில் **தாயிர்** என்ற சொல் உள்ளது. அதற்கு பறவை என்று பொருள். உவமையாக இதற்கு அமல் என்று பொருள் தரப்படுகிறது.

எந்த ஒரு அமலும் அது நல்லதாக இருப்பினும் தீயதாக இருப்பினும் செய்யப்பட்ட பிறகு பறவையைப் போன்று அவனிடமிருந்து புறப்பட்டு விடுகிறது. அந்த செயலின் துன்பம் அல்லது இன்பம் மட்டும் மிஞ்சியிருக்கிறது. ஒவ்வொரு அமலையும் செய்து விட்டு மனிதன் மறந்து விடுகிறான். நன்மை அல்லது தீய செயலின் தாக்கம் மட்டும் எஞ்சியிருக்கிறது. மனிதனின் செயலுக்கு ஏற்ற ஒரு இணக்கமான செயல் இறைவனிடமிருந்து வெளிப்படுகிறது. அந்த செயல்தான் மனிதனிடமிருந்து வெளிப்பட்ட நல்ல. கெட்ட செயல்களை அழியவிடாமல் வைத்திருக்கிறது. மாறாக மனிதனின் உள்ளத்திலும், கண்களிலும், காதுகளிலும், கைகளிலும், கால்களிலும் எழுதப்படுகிறது. இதுவே மறைமுகமாக வைக்கப்பட்ட செயல் பதிவேடு ஆகும். இது தெளிவான முறையில் மறுமையில் வெளிப்படும்.

அல்லாஹ் மனிதனை நன்மை அல்லது தீமை செய்தல், நன்மை அல்லது தீமை பற்றி கவனமூட்டுவது மட்டும் செய்யவில்லை. மனிதன் பலவீனத்தால் தவறு செய்யும் போது தனது பரந்த கருணையால் அவனை உலகம், மறுமையின் தண்டனையிலிருந்து தப்பிக்கவும், நரகத்தின் வேதனையிலிருந்து விலகுவதற்கும் தனது அடியார்களுக்கு உணர்வு ஏற்படுத்துவதற்காகவும் துஆவும் கூட கற்றுத் தந்துள்ளான். அந்த துஆ செய்யச் செய்ய அடியார்களுக்கு நன்மைகள் செய்வதற்கு கவனமும் ஏற்பட்டுக் கொண்டே செல்லும். தீமையிலிருந்து தப்பிப்பதற்கும் உணர்வு ஏற்படும்.

**சூரா பக்கராவில் அல்லாஹ் கூறுகின்றான்:**

எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகத்திலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை (வழங்குவாயாக). எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக என்று அவர்களுள் சிலர் வேண்டுகின்றனர். (2:202)

இவர்கள் சம்பாதித்ததற்கு உரிய நல்ல கூலி இவர்களுக்கு உண்டு. அல்லாஹ் மிக விரைவில் கணக்குத் தீர்ப்பவன் ஆவான். (2:203)

மனிதனின் செயல்கள், முயற்சிகள் உலக வெற்றிகளை பெறுவதற்காக மட்டும் இருக்கக் கூடாது. உலக வெற்றிகளைப் பெறுவதற்காகவும் முயற்சி செய்கின்றனர். மறுமையின் வெற்றிக்காகவும் முயற்சி செய்கின்றனர். மூன்றாவது நரக நெருப்பின் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காகவும் துஆ செய்கின்றனர். நெருப்பின் தண்டனை என்பது மறுமையின் நெருப்புத் தண்டனை மட்டுமல் அல்ல. மனிதனுக்கு கஷ்டம் தரும் எல்லா பிரச்சனைகளும் நெருப்பின் தண்டனையே ஆகும்.

இதிலிருந்து இவ்வுலகிலும் மறுமையிலும் தப்பிப்பதற்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் முஃமின்களுக்கு அடையாளமாகக் கூறுகிறான். அவர்கள் அல்லாஹ்வின் ஒவவொரு நன்மையையும் தேடுபவர்களாக இருப்பர். அது உலகியல் நன்மையாகவும் இருக்கலாம்; மறுமையின் நன்மையாகவும் இருக்கலாம். அவர்களது ஒவ்வொரு செயல் மூலமும் இறைவனது பாதுகாப்பில் வருவதற்கு முயற்சி செய்கின்றனர். அவை இறைவனை விட்டு தூர விலக்கி தண்டனைக்கு இலக்காக்கி விடுகின்ற எல்லா செயல்களிலிருந்தும் இறைவனின் பாதுகாப்பில் வர முயற்சி செய்கின்றனர். இது ஒரு கருத்தாழமிக்க துஆவாகும். ஒரு படித்தரத்தில் இருக்கும் மனிதனுக்கும் அதிலிருந்து முன்னேறுவதற்கு இது மிகவும் முக்கியமான துஆவாகும். இதனை அதிகமாக செய்ய வேண்டும். ஒரு உண்மையான முஃமின் இந்த துஆவை செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறிப்பாக வலியுறுத்தியள்ளார்கள். உலக மற்றும் மறுமையின் நன்மைகளைப் பெறுவதற்கு இந்த துஆ செய்து வருமாறும் கூறியுள்ளார்கள்.

எனவே இவ்வுலக வெற்றிகளை கேட்கும்போது மனிதன் இறைவன் பார்வையிலும் எது நல்லதாகவும் வெற்றியாகவும் இருக்குமோ அதனை கேட்க வேண்டும் என்ற கருத்தும் அடியார்களின் உரிமையைத் தருவதும் அடங்கும். இறை நெருக்கத்தை பெறும் ஒரு அமலும் இதில் அடங்கியுள்ளது. அழகிய முறையில் இறைவனுக்கு இபாதத் செய்யும் கட்டளையும் இதில் அடங்கும். மேலும் இந்த ஹஸனாத் (நன்மைகள், வெற்றிகள்) களின் பரந்த பொருளின்படி மனித அறிவுக்கு எட்டிய நன்மைகள் அல்லது எட்டாதவை இரண்டையும் மனிதன் இறைவனிடம் கேட்கிறான். இந்த ஹஸனாத்துகள் இறைவனிடமிருந்து கிடைக்கும் போது மனிதனை நெருப்புத் தண்டனைக்கு காரணமாக்குகிற செயல்களிலிருந்து ஓர் உண்மையான முஃமினைப் பாதுகாத்து விடுகிறது.

அது உலகத்தின் வெற்றி, மறுமையின் வெற்றிகளைப் பெறுவதற்கு காரணமாக அமைகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இரண்டு மேற்கோள்களை எடுத்துள்ளேன். அவை இந்த விஷயம் குறித்து தெளிவுபடுத்துகின்றன.

முஃமின் உடைய தொடர்புகள் உலகத்தில் எவ்வளவு பரந்ததாக இருந்தாலும் அது மிக உயர் தகுதியை எட்டுவதற்கு காரணமாகவே அமையும். ஏனெனில் அவர்களின் இலக்கு மார்க்கமாகவே இருக்கும். உலகம் மற்றும் அதன் பொருள்கள் எல்லாமே மார்க்கத்தின் சேவகர்களாகவே இருக்கின்றது. அசல் விஷயம் என்னவெனில் உலகம் மனிதனின் சொந்த இலக்காக இருக்கக் கூடாது. அசல் நோக்கம் மார்க்கமாக இருக்கும் பட்சத்தில் அந்நிலையில் ஒருவர் உலகைப் பெறுகிறார் எனில் அது மார்க்கத்தின் சேவைகளாகவே இருக்கும். மனிதன் ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்கு செல்வதற்கு சவாரியை பயன்படுத்துகிறான் எனில் அவனது அசல்நோக்கம் குறிப்பிட்ட இடத்தை சென்றடைவதேயாகும். சவாரியோ, அல்லது வழியில் அவனுக்கு ஏற்படும் தேவைகளோ அதை நிறைவேற்றுவதோ அல்ல. இதுபோன்று மனிதன் மார்க்கத்தின் சேவகனாக உலகை கருதியவாறு உலகத்தை தேடிப் பெற வேண்டும். மேலும் ஒரு துஆவை கற்றுத் தந்துள்ளான்.

**ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தவ் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தனவ் வகினா அஸாபன்னார்** – எங்கள் இறைவா! எங்களுக்கு இவ்வுலகிலும் வெற்றியினை வழங்குவாயாக.

மறு உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மேலும் எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவாயாக. இந்த வசனத்தில் உலகம் முதலில் கூறப்பட்டுள்ளது. காரணம் உலகத்தின் வெற்றிகள் நன்மைகள் மறுமையின் வெற்றிக்கும் நன்மைக்கும் காரணமாக அமைய வேண்டும். ஒரு முஃமினின் உலக வெற்றிகளை – நன்மைகளை பெறும்போது அதிலும்கூட மறுமையின் வெற்றிகளும் நன்மைகளும்தான் காரணமாக இருக்க வேண்டும். இதில் உலகத்தை பெறுவதற்கான மிகச்சிறந்த எல்லா வழிகளும் கூறப்பட்டு விட்டன. ஏனெனில் ஒரு முஸ்லிம் இந்த அடிப்படையில் உலகைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதனைப் பெறுவதில் நன்மையும் சிறப்பையும் பெறுவது நோக்கமாக இருக்க வேண்டும். மனித குலத்தை ஏதாவது ஒரு வகையில் கஷ்டம் ஏற்படுத்த அவ்வழி காரணமாக இருக்கக் கூடாது. அல்லது மனிதனுக்கு வெட்கத்தை ஏற்படுத்தும் வழியாகவும் இருக்கக் கூடாது. அவ்வாறு கவனித்து செய்யும் போது அது மறுமையின் வெற்றிகளைப் பெறுவதற்கு காரணமாக அமையும். எவர் இறைவனுக்காக வாழ்வை அர்ப்பணிக்கின்றாரோ அவர் மிகவும் தாழ்ந்து விடமாட்டார் என்பதை நன்கறியுங்கள். ஒருபோதும் தாழ்ந்து விடுவதில்லை. மார்க்கத்திற்காக ஒருவர் தம்மை அர்ப்பணிக்கும்போது அது அவரை எச்சரிக்கையும் உறுதியும் உள்ளவராக்குகிறது. சோம்பல் மற்றும் மாசுகள் அவர்களிடம் வராது.

**ஹதீஸில் அம்மார் பின் கஸிமா அறிவிக்கின்றார்கள்.** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என் தந்தையிடம், உமது நிலத்தில் மரம் நடுவதிலிருந்து உம்மை தடுத்தது எது? என்று கேட்டார்கள். அதற்கு என் தந்தை, நான் கிழவன், நாளை சாகப்போகிறேன். (இப்போது மரம் நடுவதால் என்ன ஆகப்போகிறது?) என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். நீர் நிச்சயமாக உமது நிலத்தில் மரங்களை நட்டு வளர்க்க வேண்டும்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்கள்: பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் என் தந்யையுடன் சேர்ந்து எமது நிலத்தில் மரம் நட்டதை நான் கண்டேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சோம்பலிலிருந்து எப்போதும் பாதுகாப்பு தேடினார்கள். நான் மீண்டும் கூறுகிறேன். ஒருபோதும் சோம்பேறியாகி விடாதீர்கள். உலகத்தின் ஹஸனாத்துகளைப் பெறுவதை அல்லாஹ் தடுக்கவில்லை. மாறாக உலக நன்மைகளை பெறுவதற்காக துஆ செய்யுமாறு கூறியுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேற்கோள் காட்டியுள்ள ஹதீஸில் அம்மனிதர் கூறுகிறார். நான் தான் சாகப்போகிறேன்? மரம் நட்டி என்ன செய்யப் போகிறேன்? ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். உமக்கு உயிர் இருக்கும் வரை உலக அருள்களைப் பெறுவதற்காக முயன்று வாருங்கள். அது உமக்காக மட்டுமல்ல. உமக்கு பின்னால் வருபவர்களுக்கு உலக ஹஸனாத்துகள் கிடைப்பதற்காகவும் முயற்சி செய்ய வேண்டும். சந்ததிகளின் மார்க்க நலனுக்காகவும் கூட சில நேரங்களில் அது அவசியமாக இருக்கிறது. சந்ததிகள் விரக்தியடைந்து தடுமாறி விடாமல் இருப்பதற்கும் அது தேவை. அதன் மூலம் ஒரு நிர்ப்பந்தமோ வறுமையோ மார்க்கத்தைப் பெறுவதிலிருந்து தடுத்து விடக்கூடாது.

ஒருவர் தனக்காக மட்டும் ஹஸனாவைத் தேடினால் போதாது. தனது சந்ததிகளுக்காகவும் ஹஸனாத்துகளைத் தேட வேண்டும். அதன் மூலம் சந்ததிகளுக்கு மார்க்கத்தில் தர்பிய்யத் ஏற்பட வேண்டும். தக்வாவின்படி நடப்பவர்களின் நன்மையில் இருந்து சந்ததிகள் பயன்பெறுபவர்களாக வேண்டும். பிறகு அதன் மூலம் அவர்கள் மறுமையின் ஹஸனாத்துகளிலிருந்து பங்கு பெறுபவர்களாகின்றனர். பிறகு **ரப்பிர்ஹம் ஹுமா ரப்பயானி ஸகீரா** – என் இறைவா நான் சிறுபிள்ளையாக இருந்தபோது என்னை வளர்த்தது போன்று இவர்களிடம் நீ கருணை காட்டுவாயாக (17:25) என்று தமது பெற்றோர்களுக்காக துஆவும் செய்கின்றனர்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இன்னோர் மேற்கோள் இதுவாகும். மனிதன் தனது நஃப்ஸின் மகிழ்ச்சிக்கு இரு விஷயங்கள் தேவைப்படுகின்றன. உலகத்தின் குறுகிய வாழ்க்கை. இதில்

மனிதன் சந்திக்கின்ற சோதனைகள் கஷ்டங்கள் ஆகியவற்றில் இருந்து அமைதி கிடைக்க வேண்டும். இரண்டாவது தீமைகள் ஆன்மீக நோய்களை இறைவன் அகற்ற வேண்டும். அவற்றிலிருந்து விடுதலை பெறுவதே உலகத்தின் ஹஸனாவாகும். பௌதீகமான ஆன்மீகமான எல்லா அசுத்தமான வாழ்விலிருந்தும் பாதுகாப்பை பெறுவது உலகத்தின் ஹஸனாவாகும்.

குலிக்கல் இன்ஸானு லிஇபா – மனிதன் பலவீனமாக படைக்கப்பட்டுள்ளான். (4:29) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: மனிதனுக்கு இரு விஷயங்கள் தேவை. ஒன்று இவ்வுலக வாழ்க்கை. இது ஒரு குறுகிய கால வாழ்வு. இதனை மக்கள் மிக நீண்ட வாழ்வு என்று நினைக்கின்றனர். இதில் பல பிரச்சனைகள் தொல்லைகள் வரும். அதிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்கின்றனர். இரண்டாவது ஆன்மீக நோய்களை விட்டு தூய்மையாவது ஒரு மார்க்கவாதிக்கு அவசியமானது. அதிலிருந்தும் விலகுவது உலகத்தின் ஹஸனாவாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

ஒரு நகத்தில் வலி ஏற்பட்டாலும் கூட வாழ்வு துன்பமாகி விடுகிறது. தீய நடத்தை உள்ள பெண்களின் வாழ்வு எப்படி அசுத்தத்தால் நிரம்பியுள்ளதோ அதை போன்று மனிதர்கள் கால்நடையைப் போன்று வாழ்கின்றனர். அவர்களின் வாழ்வும் இருளால் நிரம்பியுள்ளது. உலகம் ஆகிரத்து எதுபற்றியும் அவர்களுக்கு கவலையில்லை. எனவே உலகத்திலும் சரி மறுமையிலும் சரி எல்லா விதமான தொல்லைகளில் இருந்தும் மனிதன் விலகியிருப்பதே மறுமையின் வெற்றியாகும். மறுமையின் வெற்றி கூட இவ்வுலக வெற்றியின் ஓர் அம்சமேயாகும். உலகத்தின் வெற்றி ஒரு மனிதனுக்கு கிடைத்து விட்டால் அவரது நற்செயல்கள் மறுமைக்காக ஆகிவிடுகின்றன. இவ்வுலகின் வெற்றி ஒருவருக்கு கிடைத்து விட்டால் அதுவே மறுமையின் வெற்றிக்கும் அடிப்படையாகும்.

உலக நன்மைகளை ஏன் கேட்க வேண்டும்? மறுமையின் வெற்றியை கேளுங்கள் என்று சிலர் கூறுகின்றனர்; இது தவறாகும். உடல் ஆரோக்கியம் எத்தகையது என்றால் அதன் மூலமே மனிதனுக்கு நிம்மதி கிடைக்கின்றது. அதன் மூலமே அவர் மறுமைக்காக சிறிது வேலை செய்ய முடியும். இதனால்தான் உலகை மறுமையின் விளைநிலம் என்று கூறப்படுகிறது. இவ்வுலகில் ஆரோக்கியம், கண்ணியம், சந்ததிகள், உயரிய நற்செயல்களை செய்பவர்களாக இருந்தால் அவர்களது மறுமையும் கூட நல்லதாக இருக்கும் என்று நம்பலாம். அப்போது மனிதனுக்கு இறையச்சம் உள்ளத்தில் இருக்கும். உலகத்தின் வெற்றிகள் மறுமையிலும் பயன்படும்.

நான் ஓதிய வசனத்தில் இறைவன் கூறுகின்றான்: இவர்கள் சம்பாதித்த கூலி இவர்களுக்கு உண்டு. அல்லாஹ் மிக விரைவில் கணக்குத் தீர்ப்பவனாவான். (2:203)

இதில் அல்லாஹ் **வல்லாஹு சரீவுல் ஹிஸாப்**– அல்லாஹ் விரைவில் கணக்கெடுப்பவன் என்று கூறுகிறான்.

இதுதான் பொருள். நீங்கள் செய்த துஆவுக்கு ஏற்ப அமலும் செய்வீர்கள் எனில் அல்லாஹ் நற்கூலியும் வழங்குவான். அதுவும் விரைவாக வழங்குவான். அல்லாஹ் எந்த நன்மையையும் வீணாக்கமாட்டான். உடனே கூலி தருவான். நன்மைகள் அவனது பதிவேட்டில் எழுதப்பட்டு விடுகின்றன. அது அதற்குரிய நேரத்தில் வெளிப்படும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் சாட்சியாவர். ஒவ்வொருவருக்கும் அதில் கொஞ்சமாவது அனுபவம் இருக்கிறது. இது அல்லாஹ்வின் புறமிருந்து இந்த வெற்றிகள் வெளிப்படையானதாகும்.

பிறகு இன்னொரு துஆ. இதுவும் பொதுவாக ஷஹாதத் மற்றும் தரூது ஓதிய பிறகு (அத்தஹிய்யாத்தில்) ஓதப்படுகிறது. இது ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த துஆவாகும்.

**ரப்பிஜ்அல்னீ முகீமஸ்ஸலாத்தி வமிர்துர்ரியாத்தி ரப்பனா வ(த்)தகப்பல் துஆ. ரப்பனக்ஃபிர்லி வலிவாலி தய்ய வலில் முஃமினீன யஃம யகூமுல் ஹிஸாப்** – எங்கள் இறைவா என்னையும் என் சந்ததிகளையும் தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக்கி வைப்பாயாக. எங்கள் இறைவா என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக. எங்கள் இறைவா கேள்வி கணக்கு நிகழும் நாளில் எனக்கும் என் பெற்றோருக்கும் நம்பிக்கை கொண்டவர்களெல்லாருக்கும் நீ மன்னிப்பு வழங்குவாயாக. (14:41,42)

ஒவ்வொரு தொழுகையிலும் கணக்கெடுக்கும் நாள் பற்றி கவனமூட்டப்பட்டுள்ளது. நமது ஒவ்வொரு அமலிலும் கவனம் இருக்க வேண்டும் என்பதற்காகவே இது கூறப்பட்டுள்ளது. வெற்றி வெறுமனே கிடைத்து விடாது. மறுமையின் வெற்றிகளைப் பெறக்காரணமாக இருக்கிற உலக வெற்றிகள் நமது ஒவ்வொரு அமலிலும் காணப்பட வேண்டும். அன்றாடம் நாம் நம்மையே கணக்கெடுக்க வேண்டும். இபாதத்துகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தொழுகையை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும். ஒரு மேய்ப்பவரை போன்று தமது அமலை கண்காணித்து வருவது உங்கள் கடமையாகும். பிறகு ஜமாஅத்து அன்பர்கள் ஒருவர் மற்றவருக்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்க வேண்டும். பெற்றோருக்காகவும் பிறகு மற்ற எல்லா முஃமின்களுக்காகவும் துஆ கேட்க வேண்டும். கணக்கெடுக்கும் நாளுக்காக துஆ செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ரப்பனக்ஃபிர்லீ என்றால் நமது மன்னிப்புக்காக கேட்பது மட்டுமல்ல. அதற்கு பிறகு விளக்கம் வருகிறது. ஆனால் சில வேளை தன்னிலை ஒருமை, தன்னிலை பன்மையாகி விடுகிறது. கேட்பவர் ஒருவராக இருப்பதில்லை. சில வேளைகளில் பலர் கேட்பவராகி விடுகின்றனர். இங்கு அந்த நிலை தான் விளக்கப்பட்டுள்ளது. முழு ஜமாஅத்திற்காகவும் துஆ கேட்கப்பட்டுள்ளது. மொத்த முஃமின்களுக்காகவும் துஆ வேண்டப்பட்டுள்ளது. எனவே இந்த துஆவை எப்போதும் நமக்கு முன்னால் வைக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு எல்லா நன்மைகளையும் செய்வதற்கு தவ்ஃபீக் தருவானாக. உலகம் மற்றும் மறுமையின் வெற்றிகளைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் பக்கம் எடுத்துச் செல்லக்கூடிய உண்மையான வழியில் செல்ல வைப்பானாக.

இது தொடர்பாக இன்னொரு விஷயத்தை கூற விரும்புகிறேன். பொதுவாக ஒரு அஹ்மதிக்கும் பொறுப்பாளருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. பொறுப்பாளர்கள் தமது முன்மாதிரியை நல்லதாக்கிக் காட்ட வேண்டும். அது தொழுகையை நிலைநாட்டுவதில் ஆகட்டும். மற்ற நன்மைகளை செய்வதில் ஆகட்டும், தமது முன் மாதிரி நல்லதாக இருக்கும்போதுதான் சாதாரண அஹ்மதிக்கும் அதில் கவனம் ஏற்படும். அல்லாஹ் நமக்கு அதற்காக வாய்ப்பினை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★


JUMUA KUTHBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL FUTUH MOSQUE, LONDON,

ON 19.03.2010



Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**